## In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

O.S.No.. 98/2023 தேதி- 03.09.2025

(D.W.1) - பரமசிவம்

**குறுக்கு விசாரணை**

என் வீட்டின் கதவு எண் என்ன என்றால் 11-124/6. வா.சா.ஆ- 1 ஆவணத்தின்படி என் வீட்டின் கதவு எண் 11-126/4 என்றால் சரிதான். என் வீடு குமாரபுரம் பஞ்சாயத்திற்கு உட்பட்டது என்றால் சரிதான். அந்த வீட்டின் வரி விதிப்பு எண் 4974 என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. நான் வீடு கட்டுவதற்கு வாதியிடம் பிளான் அப்புரூவல் வாங்கிதான் வீடு கட்டினேன் என்றால் சரிதான். எனது வீட்டை 2021 முதல் 2022 ஆம் ஆண்டுக்குள் கட்டி முடித்தேன். வாதி குமாரபுரம் பேரூராட்சியில் இருந்து வந்து அளந்து பார்த்துதான் வரி நிர்ணயம் செய்தார்கள் என்றால் சரிதான்.

வாதி சரியாக எனது கட்டிடத்தை அளவீடு செய்து வரி நிர்ணயிக்கவில்லை என கூறி 05.12.2022 அன்று அஞ்சலக வழியாக மனு செய்தேன் என்றால் சரிதான். 09.12.2022 மற்றும் 03.02.2023 ல் வாதி எனக்கு ஒரு பதில் அறிவிப்பு கொடுத்திருந்தார் என்றால் சரிதான். பதில் அறிவிப்புபடி எனது வீடானது 3647 சதுர அடி கொண்டது என்றும் அதற்கான வரிவிதிப்பு கணக்கீடுகள் குறித்தும் விலாவாரியாக குறிப்பிட்டு எனக்கு பதில் அறிவிப்பு கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல.

மேற்படி பதில் அறிவிப்பு வா.சா.ஆ- 1 ஆக குறியீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த அறிவிப்புகளை நான் கைப்பற்றி வாதிக்கு எந்தவித பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. எனது வழக்கறிஞர்மூலம் 2 முறை பதில் அறிவிப்பு அனுப்பியிருக்கிறேன். மேற்படி 2 பதில் அறிவிப்பை பற்றி எனது எதிருரையிலோ எனது முதல் விசாரணையிலோ கூறவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக பதில் அறிவிப்பு செய்ததாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

வாதி வரி நிலுவைத்தொகை மற்றும் வரி நிர்ணயம் குறித்தும் அறிவிப்பு அனுப்பிய பின்பும் வரி நிலுவைத்தொகை செலுத்தாததால் வாதி தனது வழக்கறிஞர் மூலம் வழக்கறிவிப்பு அனுப்பினார் என்றாலும் அதைப்பெற்றுக்கொண்ட பின்பும் எந்த வரியும் நான் செலுத்தவில்லை என்றால் சரிதான். வாதி எனது வீட்டை சரியாக அளவீடு செய்து வரி நிர்ணயிக்கவில்லை என எந்த வழக்கும் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். இந்தவழக்கில் எனது வீட்டை நீதிமன்ற ஆணையர் மூலம் அளவீடு செய்து வரி நிர்ணயம் செய்யவேண்டும் என்று எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2022 முதல் 2025 வரை உள்ள வீட்டுவரி நிலுவைத் தொகை நான் செலுத்தவில்லை என்றால் சரிதான். 2022 முதல் 2025 வரை உள்ள வீட்டுவரி நிலுவைத் தொகையானது ரூபாய் 39522 ஐ நான் செலுத்தவில்லை என்றால் சரிதான். வாதி விதித்த வரி செல்லத்தக்கதல்ல என்று தனியாக வழக்கு எதுவும் போடவில்லை என்றால் சரிதான். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் வாதி கொடுத்துள்ள அனைத்து அறிவிப்புக்கும் நான் பதில் அறிவிப்பு அனுப்பியதாக கூறியுள்ளேன் அதற்காக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு தமிழ்நாடு கட்டிட வரிவிதிப்பு முறைப்படிதான் வரிவிதிக்கப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல.

இந்த வழக்கானது 2022 முதல் 2023 வரை செலுத்தாத வரி தொகைக்குதான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2023 முதல் தற்போதுவரை வரி செலுத்தாததற்கு வாதி வேறு வழக்கு தொடர உள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் அரசுக்கு செலுத்தவேண்டிய கட்டிட வரித்தொகையை செலுத்தாமல் அரசை ஏமாற்றி வரி ஏய்ப்பு செய்யும் கெட்டநோக்கில் எனது வீட்டை சரியாக அளவீடு செய்யவில்லை என்றும் வரிவிதிப்பிற்கு சரியான முறைகளை வாதி தனது அறிவிப்பில் குறிப்பிட்டிருந்தும் நான் விளக்கம் தரவில்லை என இவ்வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கானது வாதிக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.